# தமிழக முதல்வர் மு கருணாநிதிக்கு ஓர் திறந்த மடல்



சமர்ப்பணம்

ஈழத்தேசிய விடுதலைப்போராட்ட தியாகிகளுக்கு இச்சிறிய கையேடு

மு.வரதராசு

## முன்னுரை...

**இலங்கையின் இனப்பிரச்சனைக்கு தீர்வு என்ன?**

கடந்த 30 வருடங்களுக்கு மேலாக தனிநாடு கேட்டு போராடிக்கொண்டிருக்கும் இலங்கைத் தமிழ்தேசிய இனம், சிங்கள அரசு படையினரின் இனவெறிதாக்குதல்குள்ளாகி, தினம் தினம் அழிந்து கொண்டிருப்பதை உலகத்தமிழர்கள் வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்க முடியாது.

ஒரு சுமூகமான தீர்வு அல்லது தனிநாடு என்ற நிலைக்கு வந்துவிட்ட இப்போராட்டம் தொடருமாகில் தமிழ்மக்களுக்கும், அவர்கள் சார்ந்த தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும், சிங்கள மக்களுக்கும் அவர்கள் சார்ந்த அரசும் அரசு படையினருக்கும் பெரும் அழிவையே கொடுக்குமே தவிர பயன் கிடைக்காது.

அழகிய இயற்கை தீவாகிய இலங்கையில் பல நாடுகள் தத்தமது தேவைக்காக தலையிட்டு "எரிகிற வீட்டில் பிடுங்கியதுதான் மிச்சம்" என்று அலைகின்றன. இப்பிரச்சனைக்கு அண்டை நாடான இந்தியா தலையிட்டு பாரபட்சமற்ற தீர்வு ஒன்றை ஏற்படுத்தித்தர வேண்டுமென்பதற்கு தமிழக முதல்வர் அழுத்தம் கொடுக்க வேண்டும். என்பதே இச்சிறய கையேட்டின் நோக்கம்

இக்கையேட்டை படிக்கும் தமிழ் அன்பர்களே, உலகத்தில் வாழும் அத்தனை தமிழர்களும் தத்தமது நாடுகளில் தமிழீழ போராட்டத்தை ஆதரித்தும், அங்கு நடைபெறும் இனவெறித் தாக்குதல்களை கண்டித்தும் ஆர்ப்பாட்டங்கள் செய்யவேண்டும். ஐக்கிய நாட்டு ஸ்தாபனம் உடனடியாக தலையிட வேண்டுமென்று வலியுறுத்த வேண்டும்.

விசேடமாக தமிழ்நாடு முழுவதும் திரண்டெழ வேண்டும். நாடு தழுவிய ஆர்ப்பாட்டங்கள் செய்ய வேண்டும். மத்திய அரசுக்கு உரிய முறையில் அழுத்தம் கொடுக்க வேண்டும். இதுவே உடனடித் தேவையும் நமது வரலாற்றுக் கடமையுமாகும்.

இச்சிறிய கையேட்டை எழுத எனக்கு உறுதுணையாக இருந்த காந்தன் அவர்களுக்கு என்மனமார்ந்த நன்றியை கூறிக்கொள்கிறேன்.

நீங்கள் அனைவரும் இம்முயற்சியில் ஈடுபடுவீர்கள் என்று நம்பிக்கையோடு ஆசைப்படுகிறேன். - மு.வரதராசு



## இன்று.......
## அன்புள்ள கலைஞர் கருணாநிதி அவர்களுக்கு

கல்தோன்றி மண்தோன்றா காலத்து.... என்று ஆரம்பிக்கும் உரை வீச்சுக்கள் இன்று தேவையில்லை, ஆண்ட பரம்பரை மீண்டும் ஆழ நினைப்பது..... என்று பழம் பெருமை சொற்பொழிவுகள் இன்று தேவையில்லை. கங்கை கொண்டான் கடாரம் கண்டான்...... என்ற வரலாற்றுப் பேச்சுக்கள் இன்று தேவையில்லை. தமிழனென்று சொல்லடா! தலைநிமிர்ந்து நில்லடா!! என்று சொல்லிச் சொல்லி குட்டக்குட்ட குனிந்து நின்ற காலம் எல்லாம் கடந்து விட்டது.

இன்று தமிழனுக்கு ஒரு தனிநாடு வேண்டுமென்ற போராட்டம் உச்சக்கட்டமடைந்து விட்டது. உலக நாடுகள் ஈழத்தமிழரின் வீரதீர போராட்டத்தை மூக்கின்மேல் விரல் வைத்து வியந்து திகைத்து நிற்கும் நேரம் இது.

30 வருடங்களாக பேரினவாத சிங்கள அரசினால் ஒடுக்கப்பட்டுக்கொண்டிருந்த சிறுபான்மை ஈழத்தமிழ் தேசிய இனம், வெகுண்டெழுந்து, சிங்கள அரசுக்கெதிராக உக்கிரமான மரபுரீதியான போரை நடத்திக்கொண்டிருக்கின்றனர்.

பல்லாயிரக்கணக்கான மனித உயிர்களைப்பலிகொண்ட இவ்வின விடுதலைப்போராட்டம், கோடிக்கணக்கான சொத்துக்களையும், வளங்களையும் அழித்து சுடுகாடாக்கிய இவ்வின விடுதலைப் போராட்டம், தமிழரின் கலைப்பண்பாடு, நாகரீகங்களை ஒரு பரம்பரை காலத்திற்கு அழித்துக் கொண்டிருக்கும் இவ்வின விடுதலைப் போராட்டம், இலங்கையில் வாழும் அரைக்கோடி தமிழ் மக்களையும் அழிவின் விளிம்பில் நிறுத்தி வைத்திருக்கும் இவ்வின விடுதலைப்போராட்டத்தின் முடிவுதான் என்ன?

## தனிநாட்டுப் போராட்டம் உருவாக சிங்களத் தலைவர்களே காரணம்.

1948ல் சுதந்திரமடைந்த இலங்கையின் முதல் பிரதமர் டி.எஸ் சேனநாயக்கா உட்பட தொடர்ந்து பிரதமர்களாக இருந்த எஸ்.டபுள்யு.ஆர்.டி.பண்டார நாயக்கா, சிறிமாவோ பண்டார நாயக்கா, டட்லி சேனநாயக்கா, ஜே.ஆர். ஜெயவர்த்தனா, பிரேமாதாசா, சந்திரிகா குமாரதுங்கா, ரணில் விக்ரம சிங்க, மகிந்தா ராஜபக்ஸ. ரட்ணசிறி விக்ரம நாயக்க ஆகியவர்கள் தத்தமது ஆட்சிக்காலத்தில் இலங்கைத் தமிழர்களின் அடிப்படை உரிமைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதைத் தவிர்த்து, பேரினவாத அரசியலுக்கு முக்கியத்துவம் கொடுத்ததுடன், அடக்குமுறையும் கையாண்டதால் தான் உரிமைகள் மறுக்கப்பட்ட தமிழ் இனம் தனிநாடு கேட்டு போராட்டம் நடத்தும் நிலைக்கு தள்ளப்பட்டனர் என்பதே உண்மை.

## சர்வ அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை

நாட்டை சீரழித்த இப்போராட்டத்திற்கு ஜே.ஆர் ஜெயவர்த்தனாவும் அவர் தலைமை வகித்த ஐக்கிய தேசிய கட்சியுமே மிக முக்கிய காரணம் ஆகும் என்பது உண்மை.

1977ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின் பின் தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற தமிழ்ப் பிரதிநிதிகள் எதிர்கட்சியினராக பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டதை சகித்துக்கொள்ள முடியாத அப்போதைய பிரதமராக இருந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனை சகல அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை அறிமுகப்படுத்தி "தானே ஜனாதிபதியாக அமர்ந்துக் கொண்டார்"



தொகுதி முறையிலான தேர்தல் முறை மாற்றப்பட்டு விகிதாச்சார தேர்தல் முறை அறிமுகப்படுத்தப்பட்டது. தமிழ்ப்பிரதேசங்களில் திட்டமிட்ட சிங்கள குடியேற்றத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டது. சிங்கள காடையர்களைக் கொண்டு இனக்கலவரங்களைத் தூண்டிவிடுதல் இதன் மூலம் தமிழர்களை கொல்வதுடன் சொத்துக்களை சூரையாடபடுவதும் தொடர்ந்து திட்டமிட்டு செய்யப்பட்டது.

பல்கலைக்கழக அனுமதியில் தரப்படுதலை அறிமுகப்படுத்தி தமிழ் மாணவர்களின் உயர்க் கல்வி வாய்ப்பை தடுத்தது. ஆசியாவில் புகழ்பெற்ற யாழ்ப்பாணம் பொது நூல் நிலையத்தை எரித்து சாம்பலாக்கியது. இப்படியே சர்வ அதிகாரம் கொண்ட ஜனாதிபதி செய்த இன ஒழிப்பு மற்றும் பேரினவாத செயற்பாடுகளை அடுக்கிக்கொண்டே போகலாம். தொடர்ந்து வந்த ஜனாதிபதிகளும் சர்வாதிகாரிகளாகவே நடந்துக் கொண்டனர். பாராளுமன்ற ஆட்சி முறை மாற்றப்பட்டு ஜனாதிபதி முறை உருவாக்கப்படதே இன பிரச்சனை உக்கிரமாக முக்கிய காரணமானது.

## தமிழீழ விடுதலைப்புலிகள்

பாலஸ்தீனம், நிக்கரகுவா, எல்சல்வடோர், ஆப்கானிஸ்தான் ஐரிஸ், மியான்மர், போன்ற நாடுகளின் போராட்ட அமைப்புகள் போலேவே ஈழப்போராட்டத்திலும் இருபத்தைந்து அமைப்புகளுக்கு மேல் இருந்தது. இருப்பினும் போராட்டம் வலுவடைந்த வேளையில் பல அமைப்புகள் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்புடன் இணைந்தும், சில அமைப்புகள் கொள்கை முரண்பாடு காரணமாக இயக்க முரண்பாடுகள் ஏற்பட்டதும் உண்மையே.

ஆனால் வேலுப்பிள்ளை பிரபாகரன் தலைமையில் தற்போது போர்க்களத்தில் நிற்கும் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பே, ஒட்டுமொத்த உலகத்தமிழ் மக்களின் மதிப்புக்குரிய அமைப்பு என்பதே உண்மை. வேலுப்பிள்ளை பிரபாகரனின் தனிப்பட்ட திறமையும், போர் தந்திரங்களும், வழி நடத்தலும், உலகத்தரம் வாய்ந்த கட்டமைப்பான, முப்படைகளையும் நிறுவியதும், அரசு படையினருக்கு எதிராக சரியான பதிலடி கொடுப்பதும், நாட்டில் குறிப்பிட்ட ஒரு பகுதியை தமது கட்டுப்பாட்டின்கீழ் நீண்டகாலமாக வைத்திருந்து நிர்வகிப்பதும் பல நாட்டு இராஜ தந்திரிகளால் பாராட்டப்படுகிறது.

இன்று ஈழத் தமிழ் மக்களையும், தமிழ்பிரதேசங்களையும் கட்டிக்காப்பதுடன் எதிரிக்கெதிரான போராட்டத்தையும் அரசின் முப்படைகளின் தாக்குதல்களை முறியடித்து வரும் தமிழீழ விடுதலைப்புலிகளின் சில குறைபாடுகளை விமர்சிப்பது பொருத்தமற்றது, தவறானது.

## ***சர்வதேச உளவு நிறுவனங்கள்***

இலங்கை, உலகில் ஒரு கேந்திர ஸ்தானத்தில் அமைந்திருப்பதாலும் அங்குள்ள திரிகோணமலை இயற்கை துறைமுகத்திலும் பல நாடுகள் இலங்கை மீது மோகம் கொண்டிருந்தன. இரண்டாம் உலக யுத்தத்தின் பின்பு அமெரிக்கா இலங்கையில் திருகோண மலைத்துறைமுகத்தில் அதிக கவனம் செலுத்தத் தொடங்கியது உண்மையே.

இலங்கை திரிகோணமலைத் துறைமுகத்தில் அமெரிக்கா தளம் அமைக்க முயற்சிப்பதை இந்தியா மிக உன்னிப்பாக அவதானித்து வந்தது. இலங்கையில் போராட்டம் முளைவிட



தொடங்கும் போதே அமெரிக்க, இந்திய உளவு நிறுவனங்கள், அரசியல் கட்சிகள் மத்தியிலும் போராளி இயக்கங்கள் மத்தியிலும் ஊடுருவ தொடங்கி விட்டன. இவை மட்டுமல்ல இஸ்ரவேலின் மொசாட், பாகிஸ்தானின் உளவு நிறுவனங்கள் உட்பட பல உளவு நிறுவனங்கள் இன்றுவரை தத்தமது தேவைக்கேற்ப உளவு வேலைகளில் ஈடுப்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றது. அத்தனை உலக நாடுகளின் உளவு நிறுவனங்களின் நடவடிக்கைகளையும் கடந்து ஈழத்தேசிய விடுதலைப் போராட்டம் வெற்றிநடைபோடுகிறது. என்பது பல நாடுகளையும் ஆச்சரியத்திற்குட்படுத்தியுள்ளது.

## ***போர்முனை***

போர்முனையில் கொலைகள், வெடிச்சத்தங்கள், மரண ஓலங்கள் தவிர்க்கமுடியாதவை. இதில் மறைப்பதற்கு ஒன்றுமில்லை. கடத்தல், கொலை செய்தல், சித்திரவதை செய்தல், கைது செய்தல், பதில் தாக்குதல் நடத்துதல், உளவு பார்த்தல், வதந்திகளைப் பரப்புதல், தமது இழப்புகளை குறைத்து அல்லது மறைத்தல், அல்லது மறுத்தல், தவறுதலாக கொலை செய்தல், போர் முனையிலிருந்து தப்பி ஓடுதல், தீவைத்தல், ஆயுதங்களை கொள்ளையடித்தல், அகதியாக்குதல், ஆட்சேர்த்தல், இவையெல்லாம் போராட்டத்தின் அங்கங்கள். உலகின் நடைபெற்ற எல்லா போராட்டங்களிலும் மேற்படி சம்பவங்கள் நடைபெற்றன. அமெரிக்கா, ஜப்பான், இந்தியா, ஜெர்மனி, பிரான்ஸ், உட்பட எல்லா நாட்டின் படையினரும் மேற்படி போர் நடவடிக்கைகளைச் செய்தவர்கள்தான். என்பதை மூடி மறைக்க முடியாது. போர்களம் என்றால் அப்படித்தான் இருக்கும். தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்திலும் இவை நடைபெறுவதை மேற்படி நாடுகள் குறைகூறுவது தவறானது. - அர்த்தமற்றது.

## போர்க் கருவிகள்

உலகில் போர்க்கருவிகளை உற்பத்தி செய்யும் வளர்ந்த நாடுகள் தத்தமது உற்பத்திகளை வளர்முக நாடுகளுக்கு விற்பனை செய்வதுடன் கள்ளச் சந்தைகளிலும் விற்பனை செய்வதை அனைவரும் அறிந்ததே. அமெரிக்கா, ரஷியா, ஜப்பான், சீனா, ஜெர்மனி, இன்னும் பல்வேறு நாடுகள் உட்பட பல நாடுகள் போர்க்கருவிகளை உற்பத்தி செய்து சந்தைக்கு அனுப்புகின்றன.

கைத்துப்பாக்கியும் போர் கருவிதான் இதன் மூலமும் கொலை செய்ய முடியும், போர் விமானமும் போர்க்கருவிதான் இதன் மூலமும் கொலை செய்ய முடியும் இரண்டுமே போர்கருவிதான் போர் என்று தொடங்கிவிட்டதால் எதிரியிடம் உள்ள போர்கருவிகளுக்கு ஈடாக போர் கருவிகளை பயன்படுவது தவிர்க்க முடியாதது. தமிழீழ விடுதலைப்புலிகள் போர் விமானங்களைப் பயன்படுத்துவது பற்றி பல நாடுகள் விமர்சிப்பது அல்லது கண்டிப்பது என்பது கேலிகுரியதாக தெரிகிறது.

## இந்தியா, இந்திரா காந்தி, ரஜீவ்காந்தி

இன்று வளர்ந்து வரும் வல்லரசாக திகழும் இந்தியா , ஈழத்தேசிய விடுதலைப் போராட்டத்தில் மிக அக்கறையுடன் இருந்ததை மறைப்பதற்கில்லை. 1982ஆம் ஆண்டு இறுதி காலத்தில் ஈழப்போராளிகள் தொண்ணூறு பேருக்கு இந்திரா காந்தியின் ஏற்பாட்டில் ஜம்மு காஷ்மீரில் முன்னாள் இந்திய இராணுவ வீரர்கள் மூலம் பயிற்சி வழங்கப்பட்டது உண்மையே. ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, ஈழப்புரட்சி அமைப்பு, தமிழீழ விடுதலை இயக்கம் ஆகிய மூன்று அமைப்புகளிலிருந்தும் தலா 30பேர் வீதம் பயிற்சி பெற்றனர். 1983ல் இவர்களுக்கு முதல் கட்டமாக சிறியரக ஆயுதங்களும் இந்தியாவினால் வழங்கப்பட்டது. மட்டுமல்ல ஈழப்போராளிகள் அமைப்பினர் தமிழ்நாட்டை பின்தளமாக பயன்படுத்துவதற்கும், ஆயுதப்பயிற்சிகள் வழங்கவும் அனுமதியும் வழங்கப்பட்டது உண்மை. முன்னாள் தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். மற்றும் கலைஞர் கருணாநிதியும் மத்திய அரசின் கொள்கையுடன் ஒத்துப்போயினர் என்பதும் உண்மை.



பாகிஸ்தானிலிருந்து பங்களாதேசத்தை பிரித்துக்கொடுத்த பாணியில் இலங்கைப் பிரச்சனையை இந்திரா காந்தி அணுகப்பார்த்தாரா? அல்லது இந்து சமுத்திர பிராந்தியத்தில் கடற்படை தளம் அமைக்க திரிகோணமலைத் துறைமுகத்திற்குள் அமெரிக்கா நுழைவதற்கு முன்பு போராளிகள் மூலம் திரிகோணமலையை தம்வசப்படுத்த முயற்சி செய்தாரோ?தெரியவில்லை. அவர் சுட்டுக்கொல்லப்பட்டபின் இலங்கைப்பிரச்சனையும் கிடப்பில் போடப்படதாக தெரிகிறது.

1986ல் இலங்கையில் உக்கிரமாக சண்டை ஏற்பட்டபோது அரசியலில் எவ்வித முன்னனுபவமும் இல்லாத இந்தியப்பிரதமராக இருந்த ராஜீவ்காந்தி, இந்திய உளவு ஸ்தாபனங்களான "றோ" "சிபிஐ" "ஐபி" இவைகளின் முரண்பாடான தகவலின் அடிப்படையில் அதிரடியாக **"இந்திய இலங்கை ஒப்பந்தம்"** செய்யப்பட்டு இந்திய இராணுவம் அமைதிப்படையாக இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அமைதிப்படையாக தமிழீழ பிரதேசத்தில் வந்த இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் முரண்பாடு ஏற்பட்டு விடுதலைப்புலிகளின் கொரில்லா தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாத இந்திய ராணுவத்தினர் மிகவும் காட்டுமிராண்டிதனமாக, மூர்க்கத்தனமாக நடந்து கொண்டதால் பல தமி ழ்மக்கள் பாதிக்கப்பட்டனர். என்பதை மறைப்பதற்கில்லை.

இவ்விடயத்திலும் சர்வதேச உளவு ஸ்தாபனங்களில் ஊடுருவலும் ஒரு காரணமாகக் கொள்ளலாம். இக்காலத்தில் "இலங்கை குருஷேத்திரம்" என்றும் அன்று பாண்டவரும் கௌரவரும் போல இன்று "சி.பி.ஐ"யும் "ரோ"வும் என்றும் விமர்ச்சிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. ராஜீவ்காந்தி கொலையிலும் உளவு ஸ்தாபனங்களின் பங்களிப்பே அதிகம் என்பது பொய்யல்ல.

ராஜீவ்காந்தி படுகொலை என்பது ஈழப்போராட்ட வரலாற்றில் ஒரு பின்னடைவு என்பது உண்மையே. இருப்பினும் அச்சம்பவம் ஒரு "துன்பியல்" சம்பவம் என்று விடுதலைப்புலிகள் அமைப்பினர் குறிப்பிடுவதையும் அவதானிக்க வேண்டியுள்ளது

## தமிழ்நாடு கலைஞர் தி.மு.க.

இந்திய வரலாற்றில், தமிழ்நாடு அரசின் அனுசரனையுடன் மத்தியில் ஒரு அரசு அமைந்திருப்பது இதுவே முதல்தடவை. இனிமேல் இப்படி ஒரு நிலை ஏற்படும் என்பது சந்தேகமே.

அடுத்தது முதிர்ந்த வயதை எட்டியிருக்கும் தற்போதைய தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்கள், மீண்டும் முதலமைச்சர் பதவியில் அமரும் அளவுக்கு அவரின் முதுமை இடம் கொடுக்குமோ தெரியவில்லை. இந்திய அரசியலில் இப்பொன்னான காலத்தை, தமிழக முதல்வர் சரியாக பயன்படுத்துவதற்கு இது ஒரு பெரிய சந்தர்ப்பம். உலகத்தில் உள்ள சகல தமிழர்களுக்கும் தாய்நாடான தமிழ்நாட்டின் முதல்வராகவும், தமிழர்களின் தளபதியுமாகவுள்ள கலைஞர் அவர்கள் மறைந்தாலும் தமிழ்கூறும் நல்லுலகில் தமிழ்மணம்பரப்பி நிற்கும் ஒரு மாமனிதராக வேண்டுமெனில், இன்றைய அரசியல் செல்வாக்கைப் பணன்படுத்தி ஈழத்தமிழர் பிரச்சனைக்கு ஒரு தீர்வை எட்டுவதே சரியானதும், புத்தி சாதுரியமானதும் என்பதை மறுக்க முடியாது.

இப்பிரச்சனையை மகிந்த ராஜபக்சவுடனோ, பிரபாகரனுடனோ, பேசி பிரச்சனையைத் தீர்க்க முடியாது. இதற்கு பல காரணங்கள் உண்டு இடியாப்பசிக்கலாகி விட்ட இப்பிரச்சனைக்கு தீர்வுகளை நடுநிலைமையாளர்களான இலங்கைத் தமிழர்கள் மற்றும் இந்திய தமிழ்ப்பற்றாளர்களை இனங்கண்டு சமஷ்டியா? மாநிலமா? யூனியன் பிரதேசமா? அல்லது வேறு தீர்வா? எனபதை ஆராய்ந்தறிந்து, ஈழத்தமிழர்களுக்கு பாதகமில்லாத ஒரு தீர்வை இனங்கண்டு, அத்தீர்வை அமுல்படுத்த இந்திய அரசை நிர்பந்திப்பதும், அரசியல் செல்வாக்கைக் கொண்டு அழுத்தம் கொடுப்பதும் சாலச்சிறந்தது.



இம்முயற்சியை தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி சிறப்பாக வெற்றிகரமாக செயல்படுத்தி ஈழப்பிரச்சனைக்கு ஓர் நல்ல தீர்வை ஏற்படுத்தி கொடுத்தால் உலகம் உள்ளவரை கலைஞர் புகழ் இருக்கும் என்பதில் ஐயமில்லை.

இது இன்று கலைஞர் கருணாநிதியின் வரலாற்றுக்கடமை என்பதே உண்மை. இம்முயற்ச்சியை இன்றே செய்யவேண்டும். அன்றேல் நாற்காலிக்கு ஆசைப்பட்டவர் என்று தமிழ் சமுதாயம் முத்திரை குத்திவிடும்.

## "தனி ஈழம்" ஏன் தீர்வாக அமையக்கூடாது

அரைக்கோடி தமிழ்மக்களைக் கொண்ட பாரம்பரிய பிரதேசத்தில் வசிக்கும் ஈழத்தமிழர்களின் தனிநாட்டுக் கோரிக்கையும், அதை ஒட்டிய போராட்டத்தையும், உலக நாடுகள் ஏன் அங்கீகரிக்கக்கூடாது.

இலங்கையில் இரண்டு தேசிய இனங்கள் வாழ்கின்றதை பிரித்தானியர் மட்டுமல்ல அவர்களுக்கு முன்பாக இலங்கையை கைப்பற்றிய போர்த்திகேயரும், ஒல்லாந்தரும் ஏற்றுக்கொண்டனர் என்பது வரலாறு.

பாலஸ்தீன விடுதலைப்போராட்டத்தை அங்கீகரித்த இந்தியா ஏன் ஈழப் போராட்டத்தை அங்கீகரிக்க கூடாது. பாலஸ்தீனத்திற்கும் இந்தியாவிற்கும் தொப்புள் கொடி உறவா இருக்கிறது.?

அண்டைநாடு எரிந்து கொண்டிருக்கிறது. இந்தியா பாராமுகமாக இருக்கலாமா? தொப்புள் கொடி உறவு கொண்ட இலங்கை பூர்வீகத் தமிழர்களும், இந்திய தமிழர்களும் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்துக்கொண்டிருப்பதை தமிழ்நாட்டுத் தலைவர்கள் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்கலாமா?

ஈழப்பிரச்சனையைப் பற்றி வாய்கிழியப்பேசும் தமிழ்நாட்டு அரசியல் தலைவர்கள் அறிக்கை விடுவதிலும், உரையாற்று வதிலுமிருந்து வீதி இறங்கி மனப்பூர்வமாக எப்பொழுது போராட்டம் நடத்தப் போகிறார்கள். ஈழப்பிரச்சனையை அரசியலுக்காக மட்டும் பயன்படுத்தும் தமிழ்நாட்டு அரசியல் தலைவர்கள் என்ற அவப்பெயரை எப்போது பொய்யாக்கப் போகிறீர்கள்?

(மலேசியத் தமிழர்களே சிவாஜிப் படம் பார்க்க திரை அரங்குகளை நிரப்பி வீதிகளில் வழிந்து நிற்கும் நீங்கள் தனிநாடு கேட்டுப் போராடிகொண்டு, நாளாந்தம் வீரச்சாவை தழுவிக்கொண்டிருக்கும் ஈழத்தமிழ் இளைஞர்களுக்காக எப்பொழுது வீதிகளில் இறங்கி ஆதரவுத் தரப்போகிறீர்கள்!)

தொடர்புக்கு:
**M.Varatharajoo,** 1A, Block 21, PKNS Flats Sec.16, 40000 Shah Alam, Selangor Malaysia H/P 016-2851294